# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.209/2024

Name : தீபா (PW8)

Date: 12.08.2026

எதிரிகள் ஆஜரில் இல்லை.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் நேரம் இரவு 8.30 மணி இருக்கும் என்றால் சரியல்ல, 8.00 மணி சுமார் ஆகும். சம்பவ நடந்த இடமானது முழுமையான இருள்சூழ்ந்த இடம் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமானது தென்வடல் ரோட்டில் கிழபுறத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் மின்விளக்கு இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அருகில் உள்ள நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த சாட்சிகள் மணி மற்றும் செல்வராஜ் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளேன். மேற்படி இருவரும் கண்ணுற்ற சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

2. அண்டை வீட்டார் யாரையும் விசாரிக்காமல் உள்ளது வழக்கில் நம்பகத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் அண்டை வீட்டார் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் அவர்களை விசாரிக்கவில்லை. அவ்வாறு சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்பதை எனது வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. அண்டை வீட்டார் நிறைய நபர்கள் இருந்தும் விபத்தில் இறந்துபோனவரின் உறவினர்களை சாட்சிகளாக குறிப்பிட்டுள்ள நிலையில் வழக்கில் நம்பகத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் மணி மற்றும் செல்வராஜ் ஆகியவர்கள் உறவினர்கள் இல்லை. அவர்கள் சம்பவ இடத்தில் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த சாட்சிகள் ஆவார்கள். அண்டை வீட்டார் நிறைய நபர்கள் இருந்தும் வேறு பகுதியில் உள்ளவர்களை விசாரித்தது வழக்கில் நம்பகத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் சரியல்ல.

3. இறந்து போனவரின் விபத்து பதிவேட்டில் பெயர், முகவரி தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஏனென்றால் விபத்தில் அடிபட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குஅனுப்பி வைத்ததால் மேற்கண்டவாறு மருத்துவர் சிகிச்சைக்குஅனுமதித்த போது குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்து போனவரின் விபத்து பதிவேட்டில் தகவல் யார் சொன்னார்கள் என்ற விபரம் இல்லை என்றால் 108 ஆம்புலன்ஸ் என்று மட்டும் தான் உள்ளது. 108 ஆம்புலன்ஸ்–க்கு யார் போன் செய்தார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 108 ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.08.12 17:22:50 +0530

108 ஆம்புலன்ஸ் டிரைவரை விசாரித்து இருந்தால் கண்ணுற்ற வினோத்குமார், செல்வராஜ் சம்பவ நடந்த இடத்தில் இல்லை என்று தெரிந்துவிடும் என்பதால் தான் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விசாரிக்காததது வழக்கில் உண்மை தன்மையில் சந்தேகப்படும்படியாக உள்ளது என்றால் சரியல்ல.

4. அரசு மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் உள்ள தொலைபேசி எண்ணை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் அது 108 ஆம்புலன்ஸ் டிரைவரின் தொலைபேசி எண்ணாகும். பொதுவாக ஒரு வாகனம் வேறொரு நபர் மீது வேகமாக மோதும் போது வாகனத்தில் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் காலம்12ல் வாகனத்தில் எவ்விதமான சேதாரமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன தியாகராஜனின் வயது என்ன என்றால் 73 ஆகும். வயது மூப்பின் காரணமாக இறந்துபோன தியாகராஜனுக்கு செவி திறன் மற்றும் கண்பார்வை பற்றிவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் செய்யவில்லை. இறந்துபோன தியாகராஜனுடன் 108 ஆம்புலன்ஸ்–ல் வினோத்குமார், செல்வராஜ் ஏன் உடன் செல்லவில்லை என்பது பற்றி சிறப்பு காரணம் உள்ளதா என்பது குறித்து விசாரித்து வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. அ.சா.1 புகார் அளித்தவுடன் வாக்குமூலம் பெறப்பட்டதா என்பது பற்றி கீழ்நிலை அதிகாரியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டது என்பதற்காக உதவி ஆய்வாளரிடம் விசாரித்து வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் காலதாமதமாக அனுப்பப்பட்டதற்கான காரணம் நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தனிநபர் யாரையும் விசாரிக்காமல் உறவினர்களை மட்டும் விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல, உறவினர் அல்லாத சாட்சிகளையும் விசாரித்துள்ளேன். அடிபட்டதாக சொல்லும் வாகனத்தில் எவ்விதமான சேதாரமும் இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் எதிரி வாகனத்தை வேகமாக இயக்கினார் என்பது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல.

6. அனைத்து சாட்சிகளையும் விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக இயக்கவில்லை என்பது தெரிந்து விடும் என்பதால் தான் அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பிரேத விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவைகள் 27.02.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக உள்ள நிலையில் நீதிமன்றத்தில் தாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் குற்றப்பத்திரிக்கையோடு இணைத்து தாக்கல் செய்துள்ளேன்.

7. அனைத்து வழக்கு ஆவணங்களும் 26.01.2022 ம்தேதியில் அதிலிருந்து 10 நாட்களுக்குள் பெறப்பட்டுள்ள நிலையில் நீண்ட காலதாமதத்திற்கு பின்னிட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது அவ்வாறு பெறப்பட்ட ஆவணங்கள் குறித்தும் பதிவு

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.08.12 17:22:57 +0530

செய்யப்பட்டுள்ள வாக்குமூலம் குறித்தும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் சரியல்ல. உரிய தேதியில் வாக்குமூலங்களும், ஆவணங்களும் பெறப்பட்டிருந்தால் அவ்வப்போதே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு அனுப்பாதது புலன்விசாரணை குறித்து பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்னபடி எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும், இறந்துபோன நபருக்கு வாகன விபத்து இழப்பீடு பெற்று தர ஏதுவாக புகார்தாரால் கொடுக்கப்பட்ட தவறான தகவலின் அடிப்படையில் முழுமையான விசாரணை மேற்கொள்ளாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவோ கவனக்குறைவாகவோ இயக்கவில்லை என்பது தெரிந்து இருந்தும் தவறாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கின் உண்மைத்தன்மை குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் சரியல்ல. சம்பவ இடமானது இருள்சூழ்ந்த பகுதியிலும் தனது வயது மூப்பின் காரணமாக செவித்திறன் மற்றும்கண்பார்வை இழப்பு காரணமாக ஏற்பட்டதாக கூறப்படும் விபத்தினை எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டியதாக தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.08.12 17:23:01 +0530